விலகமுவ பிரதேச சபை - 2021

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

வில்கமுவபிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் வில்கமுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்குஇணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுதவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் பாதகமாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது பாதகமானஅபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால்பெற்றுக்கொள்ளப்பட்டகணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்குஇணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்காக கிடைத்திருந்த நீதிமன்ற தண்டப்பண கட்டணத்தை கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண கணக்கில் குறிப்பிடாது நீதிமன்ற தண்டப்பண வருமான கணக்கில் குறிப்பிட்டதன் காரணமாக நிலுவை நீதிமன்ற தண்டப்பண கணக்கு மற்றும் ஆண்டின் நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 2,071,330 கூடுதலாக காட்டப்பட்டது. | கணக்காய்வு விடயத்தை ஏற்றுக் கொள்கிறேன். 2022 கணக்கு மூலம் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக தயாரித்த தேறிய சொத்து தொடர்பான கூற்றில் உரிமைகளின் கூட்டுத் தொகை ரூபா 150,286,680 ஆன போதும் நிதி நிலைமை கூற்றில் அது ரூபா 155,270,905 ஆக ரூபா 4,984,225 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு விடயத்தை ஏற்றுக் கொள்கிறேன். 2022 கணக்கு மூலம் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் மிகை நிதி செயலாற்றுகை கூற்று பிரகாரம் ரூபா 12,033,417 ஆன போதும் திரண்ட நிதியத்திற்கு பா 7,076,983 ஆக செம்மையாக்கி இருந்ததால் திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 4,956,434 குறைத்துக் காட்டப்பட்டது. | கணக்காய்வு விடயத்தை ஏற்றுக் கொள்கிறேன். 2022 கணக்கு மூலம் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட தேறிய சொத்துக்கள் பற்றிய கூற்றில் 2020 ஆண்டிலிருந்து முன்கொண்டு வரவேண்டிய கூட்டுப் பெறுமதி ரூபா 10,949,297 ஆன மானியம் மற்றும் தொகுதி கணக்குகளிலிருந்து விடுபட்ட காரணத்தால் நிகழ் ஆண்டில் உரிமை அப்பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு விடயத்தை ஏற்றுக் கொள்கிறேன். 2022 கணக்கு மூலம் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் மூலதன அன்பளிப்பு கிடைப்பனவு ரூபா 7,432,603 ஆன போதும் நிதி செயற்பாட்டு கூற்றில் அது ரூபா 14,308,191 ஆக ரூபா 6,875,588 கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | பதிழ் வழங்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 28 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்களின் பிரகார பெறுமதி மற்றும் நேரொத்த அறிக்கை பிரகார பெறுமதிக்கிடையில் ரூபா 14,584,582ஆனஇணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | சரி செய்துக்ககொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | வித்தியாசத்தை இனங்கண்டு கணக்கு குறிப்புகளை சரி செய்ய வேண்டும்.. |

### 1.6.3 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 2008 ஆண்டிற்கு முன்னரிலிருந்து நிலவி வரும் ரூபா 1,501,545 ஆன தொங்கல் கணக்கு மீதியை தீர்த்திருக்கவில்லை. | 2007 ஆண்டு முதல் நிலவிவரும் இந்த தொங்கல் மீதி தொடர்பாக அனைத்து தகவல்களையும் பரிசோதித்துப் பார்த்து சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | தொங்கல் கணக்கை தீர்க்க வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விபரங்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| ரூபா 110,920,248 ஆன 05 கணக்கு விடயங்களிற்குரிய எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததால் கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | கண்டரிந்து சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | கணக்கு மீதிகளில் பெறுமதிகளை உறுதி செய்யும் எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 4,347,452 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 1,139,387 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டு இறுதியில் ரூபா 3,540,823 ஆன மொத்த வருமான நிலுவை மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 5,715,345 வரை அதிகரித்திருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் 665 அதச வீதவரி அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை ரூபா 143,292 உள்ளடங்களாக ரூபா 480,739 ஆன நிலுவை வீதவரி அறவிடப்படவில்லை. | எதிர்காலத்தில் இத் தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறவிக்கிறேன். | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 1971 இன் 48 இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான விஷேட ஏற்பாட்டு சட்டம் பிரகாரம் வீதவரி அறவிட சொத்துக்களை 05 ஆண்டுகளிற்க ஒரு முறையாவது மதிப்பிட வேண்டிய போதும் அவ்வாறு செய்யாது 2011 ஆண்டின் வீதவரி மதிப்பீட்டின் மீது மீளாய்வாண்டிலும் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | 02 வருடங்களிற்காக புதிய மதிப்பீட்டை நிறுத்தியுள்ள வர்தமானியை இரத்துச் செய்தால் 2023 புதிய மதிப்பீட்டை நடைமுறைப்படுத்த இயலுமை காணப்படுகிறது. | புதிய மதிப்பீடொன்றை மேற்கொண்டு வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 12 ஆண்டுகளிற்கு அதிக காலமாக அறவிடாது நிலவும் ரூபா 665,316 அன நிலுவை கடையறை வாடகையை மீளாய்வாண்டிலும் அறவிட்டிருக்கவில்லை. | காணி உரிமை இல்லாததால் இக் கடையறை வாடகையை அறவிட முடியாதுள்ள போதும் அத் தொகையை பதிவழிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | நிலுவை கடையறை வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 12 ஆண்டுகளிற்கு அதிக காலமாக பொதுச் சந்தையின் 11 கடையறைகளின் உரிமையை சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்காத காரணத்தால் புதிய மதிப்பீடொன்றின் மீது குத்தகை வழங்கி சபைக்கு பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | இக் கடையறைகளை சபைக்கு ஒப்படைக்குமாறு பிரதேச செயலாளரிடம் கோரியுள்ளேன். | கடையறைகளின் உரிமையை சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மாகாண குறித்த அபிவிருத்தி மானியம் - 2018 விஷேட பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சிறுநீரக நோயாளர்கள் வசிக்கும் 103 வீடுகளிற்காக 500 லீட்டர் நீர் தாங்கிகளை வழங்க ரூபா 478,900 செலவிட்டு 103 நீர் தாங்கிகளை கொள்வனவு செய்திருந்த போதும் அந் நீர் தாங்கிகளை உரிய பயன்பாட்டாளர்களுக்கு வழங்கியிருக்கவில்லை. | பொது பயன்பாட்டிற்காக குறித்த அங்கத்தவரின் தலையீட்டின் மீது பொது இடங்களில் வைப்பதற்காக வழங்கப்பட்டுள்ளன. | நீர் தாங்கி குறித்த பயன்பாட்டாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2019 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப புலன் விசாரணை ஒன்றின் மூலம் பிரதேச சபைக்கு சொந்தமான 40 கெல்வனஸ் இருப்பு (GI) குழாய்களின் பற்றாக்குறை தொடர்பாக குறித்த நி.பி. 104(4) பரிசோதனை மூலம் அதற்கு தொடர்பான அலுவலர்களிடமிருந்து சட்ட ரீதியாக நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென பரிந்துரைத்திருந்த போதும் நட்டத்தை அறவிட்டிருக்கவில்லை. | குறித்த அலுவலர்கள் மற்றும் அங்கத்தவர்கள் மிகை அறவீட்டை செலுத்தாததால் மீண்டும் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | நி.பி. 104 பிரகாரம் குறித்த பற்றாக்குறையின் பெறுமதியை அறவிட நடடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பிரதேச சபைக்கு சொந்தமான எனினும் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாத பல நிலையான சொத்துக்கள் சபை வளவில் காணப்பட்டன. இந்த பெறும்பாளான நிலையான சொத்துக்களை மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டதுடன் அனேகமான மோடார் வாகனங்கள் மற்றும் இயந்திரங்களிற்காக தற்போது திருத்துவதற்கு தேவையான உதிரிப்பாகங்கள் சந்தையில் இருக்கவில்லை. அதன் பிரகாரம் இச் சொத்துக்களை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமான அனுமதிப் பத்திர கட்டணத்தை விடுவித்த பின்னர் பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிப்பிரமாணம் 770(4)(ஆ) பிரகாரம் பராதீனம் செய்ய நடடிக்கை எடுக்க வேண்டும். |